பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4
19 10 2025 SUNDAY 7 15 AM
ஆகாஷவாணி – <u>செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வேளாண் பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2. ஜிஎஸ்டி சீர்திருத்த நடவடிக்கைகள், உற்பத்தி துறைக்கு புதிய உத்வேகத்தை அளித்துள்ளதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

3. மத்திய அரசின் கொள்கைகள் வலுவான பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்துள்ளதாக தகவல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

4. ரயில்வே துறையின் செயல்பாடுகள் குறித்து தவறான வீடியோ பதிவுகளைப் பகிரும் சமூக ஊடகங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க**ப்படும்** என்று ரயில்வே எச்சரித்துள்ளது.

5. இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி பெர்த்தில் இன்று நடைபெறுகிறது.

>>>>>>><<<<<<

விவசாயிகள், வேளாண் உற்பத்தியுடன் கால்நடை வளர்ப்பு, மீன்பிடி தொழில், தேனி வளர்ப்பு ஆகியவற்றிலும் ஈடுபட வேண்டும் என்று மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் வலியுறுத்தியுள்ளார்.

உத்தரபிரதேச மாநிலம், கோரக்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விவசாயிகளுடன் கலந்துரையாடிய அவர், வேளாண் பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

வேளாண் உபகரணங்களுக்கான சரக்கு மற்றும் சேவை வரி குறைக்கப்பட்டிருப்பது, விவசாயிகளுக்கு நேரடி பலனை அளிக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

தரமான விதைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள், உரங்கள் ஆகியவை தடையின்றி கிடைப்பதை உறுதி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறினார்.

>>>>>>><<<<<<

ஜிஎஸ்டி சீர்திருத்த நடவடிக்கைகள், உற்பத்தி துறைக்கு புதிய உத்வேகத்தை அளித்துள்ளதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தொழில்துறையினர், வர்த்தகர்கள் மற்றும் சாமானிய மக்களுக்கு இது பெரிதும் உதவிடும் என்று தெரிவித்தார்.

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய சீர்திருத்த நடவடிக்கை இது என்று அவர் குறிப்பிட்டார்.

நேரடி மற்றும் மறைமுக வரிகள் மூலம் இரண்டரை லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது, முன்னெப்போதும் இல்லாத துணிச்சலான நடவடிக்கை என்றும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

மத்திய அரசின் கொள்கைகள் வலுவான பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்துள்ளதாக தகவல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், உற்பத்தி துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக கூறினார்.

மின்னணு சாதனங்களுக்கான சூழல் அமைப்பு குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சி கண்டுள்ளதாகவும், சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைகள், முதலீடு மற்றும் உற்பத்தி துறைக்கு உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்றும் தெரிவித்தார்.

நவராத்திரி பண்டிகை காலத்தில் மின்னணு சாதனங்களின் விற்பனை, கடந்த ஆண்டைக் காட்டிலும் 25 சதவீதம் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

செமிகண்டக்டர் உற்பத்தியில் இந்தியா விரைவில் முன்னணி நாடாக உருவெடுக்கும் என்று திரு. அஷ்வினி வைஷ்ணவ் நம்பிக்கை தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

சுகாதார அமைப்புகளில் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை உலக சுகாதார அமைப்புடன் இணைந்து அதிகரிக்க உள்ளதாக மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், உலக சுகாதார அமைப்புடன் இணைந்து இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோயாளிகள் மற்றும் அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்த விவரங்களை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மூலம் ஒருங்கிணைப்பது, ஆய்வாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் புதுமை கண்டுபிடிப்பாளர்களுக்கு உதவிடும் என்று அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

>>>>>>><<<<<<<

ரயில்வே துறையின் செயல்பாடுகள் குறித்து தவறான வீடியோ பதிவுகளைப் பகிரும் சமூக ஊடகங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க**ப்படும்** என்று ரயில்வே எச்சரித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பண்டிகை காலங்களில் உண்மைக்குப் புறம்பான செய்திகள் பயணிகளுக்கு குழப்பத்தை உருவாக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற செய்திகளை வெளியிடும் 20க்கும் மேற்பட்ட சமூக ஊடக வலைதளங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவற்றின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயணிகள் ரயில்வே வெளியிடும் அதிகாரப்பூர்வ அறிக்கைகளை மட்டுமே கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் அந்த அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>>>><<<<<<<

தீபாவளி பண்டிகையையொட்டி தலைநகர் தில்லி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தில்லி காவல்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் முக்கிய சந்தைப் பகுதிகள், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள் மற்றும் வர்த்தக மையங்களில் பல அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கிய பகுதிகளில் போக்குவரத்து நெரிசலை சீர்செய்யும் பணிகளில் காவல்துறையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலும், சட்டம் ஒழுங்கை பராமரிக்கும் வகையிலும் போதுமான அளவில் காவல்துறையினர் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

>>>>>>><<<<<<<

*ஹரியானா மாநிலம், கைதல் பகுதியில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட நான்கு பேரை அம்மாநில காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.*

*போதைப் பொருள் கடத்தப்படுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் சிறப்பு புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது, போதைப் பொருள் கடத்தி வருவது கண்டறியப்பட்டதாக மாவட்ட துணை கண்காணிப்பாளர் திரு. சுஷில் பிரகாஷ் தெரிவித்தார்.*

*அவர்களிடமிருந்து 40 லட்சம் ரூபாய் மதிப்பிலான 305 கிலோ போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.*

>>>>>>><<<<<<<

*மகாராஷ்டிரா மாநிலம், நந்தூர்பார் மாவட்டத்தில் உள்ள Chandshaili மலைப்பகுதியில் நேரிட்ட சாலை விபத்தில், 8 பேர் உயிரிழந்தனர். 28 பேர் காயமடைந்தனர்.*

*அஸ்தம்பா யாத்திரையை முடித்துவிட்டு சொந்த ஊர் திரும்பிக் கொண்டிருந்த இந்த பயணிகள் சென்ற பேருந்து கட்டுப்பாட்டை இழந்து இந்த விபத்து ஏற்பட்டதாக மாவட்ட காவல்துறையினர் தெரிவித்தனர்.*

*இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் அருகில் உள்ள நந்தூர்பார் மாவட்ட அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.*

>>>>>>><<<<<<<

*பீகார் சட்டப்பேரவை தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் ஐந்து வேட்பாளர்கள் அடங்கிய இரண்டாவது வேட்பாளர் பட்டியலை அக்கட்சி வெளியிட்டுள்ளது.*

*அக்கட்சியின் திரு. சஷ்வத் கேதார் பாண்டே நர்கத்தியாகஞ்ச் தொகுதியிலும், திரு. மொஹமத் க்வாம்ருல் ஹோடா கிஷன்கஞ்ச் தொகுதியிலும், திரு. மொஹமத் இர்ஃபான் ஆலம் கஸ்பா தொகுதியிலும் போட்டியிடுகின்றனர்.*

>>>>>>><<<<<<<

*ஜம்மு கஷ்மீரில் உள்ள நக்ரோட்டா சட்டப்பேரவை தொகுதிக்கான இடைத்தேர்தலில் பிஜேபி சார்பில் போட்டியிடும் தேவயானி ரானா வேட்புமனு தாக்கல் செய்துள்ளார்.*

*வேட்மனு தாக்கலின் போது அக்கட்சியைச் சேர்ந்த மூத்த தலைவர்களும், தொண்டர்களும் உடனிருந்தனர்.*

இந்த இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு அடுத்த மாதம் 11ஆம் தேதி நடைபெறுகிறது.

இத்தொகுதியில் சட்டப்பேரவை உறுப்பினராக இருந்த தேவயானி ரானாவின் தந்தை தேவேந்தர் சிங் ரானா மறைவை அடுத்து, இந்த இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

>>>>>>><<<<<<<

பொலிவியாவின் அதிபர் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், இன்று மீண்டும் வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

கடந்த 20 ஆண்டுகளாக தென்அமெரிக்க அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வந்த சோஷலிச கட்சிக்கு அதிக வாக்குகள் கிடைத்தன.

அந்நாட்டின் பொருளாதார சூழலை கருத்தில் கொண்டு, இந்த தேர்தலில் மக்கள் வாக்களித்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கிறது.

புதிய அதிபர் அடுத்த மாதம் 8ஆம் தேதி பொறுப்பேற்கிறார்.

>>>>>>><<<<<<<

கேரளா, மாஹே, லட்சத்தீவு பகுதிகளில் ஓரிரு இடங்களில் இன்று கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு, கர்நாடகா. புதுச்சேரி, காரைக்கால், அந்தமான் நிகோபார் தீவுகளின் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

ஒடிசா, தெலங்கானா மாநிலங்களில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

பெர்த்தில் நடைபெறும் இப்போட்டி, காலை 9 மணிக்கு தொடங்குகிறது.

>>>>>>><<<<<<<

உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

இந்தூரில் இப்போட்டி பிற்பகல் 3 மணிக்கு தொடங்குகிறது.

>>>>>>><<<<<<<

குவஹாத்தியில் நடைபெற்று வரும் உலக ஜூனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் தன்வி சர்மா இன்று தாய்லாந்தின் *Anyapat Phichit Preechasak*-ஐ எதிர்கொள்கிறார்.

*>>>>>>><<<<<<<*

மலேசியாவில் நடைபெற்று வரும் ஜோஹர் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

*>>>>>>>END<<<<<<<*